# வரலாற்றில் முதல்...

கொக்கக்கோலாவைத் தள்ளி வைத்துவிட்டு, பன்ராவைக் குடித்துக் கொண்டிருந்தோம். அவர் சென்றபின் மீண்டும் கொக்கக்கோலாவைக் குடித்துவிட்டு வெளியில் வந்ததும், மாலதி சொன்னாள், ”எப்படி மணி என்னுடைய ஐடியா?” என்று. பின் இரவு பொறுப்பாளரிடம் நடந்ததை மாலதி கூறி, தனக்குத் தண்டனை தரும்படி கேட்டாள். இந்தச் சம்பவம் நடந்தது 1987-10-9 இல்.

மாலதி எவ்வளவு குழப்படிகளையும், குறும்புகளையும் செய்தாலும் இவளிடம் வீரமும், விசுவாசமும் நிறைந்து காணப்பட்டது. இவள் எவ்வளவு குறும்புகள் செய்தாலும் இவளுக்கென கொடுக்கப்படுகின்ற வேலைகளை அழகாக, முழுமையாக, திறமையாகச் செய்து முடிப்பாள்.

**கடைசி நாள்**

1987-10-10 இல்

காலையிலேயே தலையில் தோய்ந்துவிட்டு வந்த மாலதி, சமையல் அறைக்குச் சென்று சாப்பிட்டு வந்தாள். நானும் ஏற்கனவே தலையில் தோய்ந்து எனக்குப் பிடித்தமான ஜீன்ஸ், சேட் போட்டிருந்தேன். மீனுடன் சாப்பிட்டு வந்த மாலதி எதிர்பாராத விதமாக எனது சேட்டில் கையைத் துடைத்துவிட்டாள். எனக்குப் பேச வார்த்தையின்றி அவள் மேல் துப்பிவிட்டேன். அந்நேரம் எனக்கு மாலதி அடிக்கவில்லை. மீண்டும் போய்க் குளித்துவிட்டு வந்தாள். நான் அவளை என்னுடன் கதைக்க வேண்டாம் எனக் கூறிவிட்டேன்.

அன்று காலையிலேயே எமக்கெல்லாம் புதிய ஆயுதங்கள் கொண்டு வந்து தரப்பட்டன. மாலதிக்கு எம் -16 ஆயுதம் கொடுக்கப்பட்டது. மாலையில் எங்களை ஏற்ற வாகனம் வந்தது. அதில் எங்களுடைய குழுவை உடுப்புப் பைகளுடன் ஏறச் சொன்னார்கள். நாங்கள் தயாரானபோது ஒரு சின்னப் பிரச்சினை எழுந்தது. எமது குழுவில் நான்கு எம் -16 இருந்தது. எம் -16 உடன் உள்ள ஒருவரை வேறு குழுவுக்குப் போகும்படி பணிக்கப்பட்டது. இதில் இரண்டு பேர் குழுத் தலைவிகள். ஒருவர் மருத்துவம் செய்பவர். ஆகவே மாலதிக்கே அடுத்த குழுவுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ”போகமாட்டேன்” என்ற மாலதி, பின் பொறுப்பாளரின் கட்டளைக்குப் பணிந்து அடுத்த குழுவுடன் நிற்கச் சம்மதித்தாள்.

வாசலில் கண்ணீர் மல்க மாலதி நின்றுகொண்டிருந்தாள். நாங்கள் எமது உடைப் பைகளுடன் வாகனத்தில் ஏறிக்கொண்டிருந்தோம். நான் என்னுடன் கதைக்க வேண்டாம் என்று சொன்னதால், மாலதி எனக்குக் கிட்ட வரவில்லை. வாகனம் புறப்படத் தயாரானபோது, நான் மறந்துபோய் விட்ட எனது சப்பாத்தை எடுத்துக் கொண்டுவந்து தந்த மாலதி, ”என்னோடு கதைக்க மாட்டியா மணி?” என்றாள். ”இல்லை. நான் கதைப்பேன். கோபத்திலதான் அப்படிச் சொன்னேன்” என்றேன். நாங்கள் சண்டைக்குத் தயாராகிறோம் என்பது எமக்குத் தெரியும். மாலதி சொன்னாள் ”கவனமாக, நல்லா அடிபடு மணி. இருவரும் உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம்” என்றாள். இதுதான், மாலதி பிரிவின் துயரத்தோடு சொன்ன உறுதியான வார்த்தைகள். இறுதியாக நான் கண்ட மாலதியில் குழந்தைத் தனம் தெரியவில்லை. மாறாகப் போருக்குத் தயாரான கம்பீரமான படைவீரனின் சாயல் அவள் முகத்தில் படிந்திருந்தது. நாங்கள் மாலதிக்குக் கை அசைக்கவும், எங்களை ஏற்றிய வாகனம் அவள் கை அசைத்தபடி நிற்க, பறந்து சென்றது.

மாலதியைப் பிரிந்த கவலை எனக்கு மட்டும் இருக்கவில்லை, எங்கள் குழுவுக்கே இருந்தது. ஏன் என்றால், அவள்தான் எங்கள் குழுவில் கலகலப்பானவள். பயிற்சிப் பாசறையில் இருந்து ஒரே குழுவில் இருந்த எங்களுக்கு, பிரிவு என்று வந்ததும் மிகவும் கடினமாக இருந்தது. வாகனம் போய்க்கொண்டிருந்தது. என் மனம் வாகனத்தைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. என் உள்ளுணர்வு கூறியது, நான் மாலதியை நிரந்தரமாக பிரிந்து விடுவேன் என்று.

**1987-10-10 அன்று நள்ளிரவில்.......**

கோப்பாயில் எம்மவருக்கும், இந்திய இராணுவத்திற்கும் இடையே சண்டை தொடங்கிய செய்தி கிடைத்தது. தொலைத் தொடர்பில், சண்டையின் செய்திகளையும், பணிப்புரைகளையும், கட்டளைகளையும் பொறுப்பாளருடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென தொலைத் தொடர்பில் ஒரு குழு, இன்னொரு குழுவுக்குப் ‘பெண் போராளி ஒருவர் வீரச்சாவு’ என்ற செய்தியைத் தெரிவித்தது. எனக்கு ஒரு மாதிரி இருந்தது. நீண்டநாள் நட்புறவால் மனம் சொன்னது, ”ஆண்டவரே மாலதியாக இருக்கக்கூடாது” என்று. பொறுப்பாளரைக் கரைச்சல் பண்ணினேன். ”பெயர் என்ன என்று தொடர்பு எடுத்துக் கேளுங்கோ, கேளுங்கோ” என்று. திடீரெனத் தொலைத் தொடர்பு, வீரச்சாவடைந்தது மாலதி என்ற செய்தியைத் தாங்கி வந்தது.

நானோ, என்றுமே சந்தித்திராத அதிர்ச்சியைச் சந்தித்தேன். ஏனெனில், பெண் போராளிகளில் முதல் முதலில் இவளின் இழப்பைத்தான் நான் சந்தித்தேன். ‘ஓ’ என்று பெரிதாக, நான் எங்கே நிற்கிறேன் என்ற நினைவு கூட இல்லாமல் அழுதேன். பொறுப்பாளர் சிறிது நேரத்திற்குப் பின் என்னை ஏசினார். ”எங்கே நிற்கிறாய் என்று தெரியாமல் ஏன் இப்படி சத்தமாய் அழுகின்றாய்” என்று. என்றுமே பொறுப்பாளரை எதிர்த்துக் கதைக்காத நான், மாலதியின் பிரிவால் அன்று பொறுப்பாளரையே எதிர்த்துக் கதைத்துவிட்டேன்.

மாலதி தினமும் சொல்வாள், பெண்புலிகளில் நான்தான் முதல் வீரச்சாவு அடைவேன் என்பாள். அவள் சொன்னதைப் போலவே, மாலதியே விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலியாக, புரட்சிப் பெண்ணாக சரித்திரநாயகி ஆகிவிட்டாள்.

நானும், மாலதியும் கோப்பாயில் கிறேசரடி என்னும் இடத்தில் நடந்து திரிவோம். அவள் எதிரியை எதிர்கொள்ளக் காத்திருந்த, நடைபயின்ற, குறும்புத்தனங்கள் செய்த அதே இடத்தில் எதிரியின் குண்டை ஏந்தி, சரித்திர நாயகியாகச் சரிந்தாள். இவள் உலாவிய, இவள் சரித்திர நாயகியாகச் சரிந்த அதே இடத்தில் அவளுக்காகக் கட்டப்பட்ட கல்லறை நிமிர்ந்து, அவளின் வீரத்தை பசுமையான அவளின் நினைவுகளை உணர்த்தி நிற்கிறது.

இப்படித்தான் மாலதி வீரச்சாவைச் சந்தித்துக் கொண்டாள். அன்று இரவு கோப்பாய் கைதடி வீதியாக வரும் வாகனங்கள் அனைத்தையும் மறித்துப் பரிசோதனை செய்யும்படி மாலதி நின்ற குழுவினரிடம் பணிக்கப்பட்டிருந்தது. எல்லோருமே காவற்கடமையில் நிற்கும்போது வருகின்ற வாகனம் ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து அனுப்பினார்கள்.

கோப்பாய்ச் சுடலையடியில் மாலதி காவற்கடமையில் நின்றபோது, வாகனங்கள் வந்திருக்கின்றன. ஓடிச்சென்று வாகனத்தை மறித்திருக்கிறாள். மாலதி மறித்தது இந்திய இராணுவத்தின் ஆமட் கார்களை. திடும் திடுமெனக் குதித்த இராணுவத்தினர் ரவைகளைக் கண்டபாட்டில் அடிக்கத் தொடங்கினர். மாலதியும் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தாள். பின் எமது எல்லாக் குழுவினரும் மாலதியின் பக்கம் சென்று சண்டையில் இறங்கினர். எதிர்பாராத விதமாக ஏராளமான இராணுவத்தினர் எம்மவரது குழுவைச் சுற்றி வளைத்தனர். தாக்குதலைத் தொடுத்தனர். இவ்வேளையில் மாலதி படுகாயமடைந்துவிட்டாள். காயமடைந்தவளைத் தோழிகள் தூக்கி வரும்போது மாலதி ”எல்லோரும் வீணாகச் சாக வேண்டாம். என்னை விட்டுவிட்டு என்ரை எம் 16ஐ (ஆயுதம்) கொண்டு நீங்கள் ஓடுங்கோ” என்றிருக்கிறாள். தோழிகள் ”இல்லை. நாங்கள் உன்னைக் கொண்டு போகின்றோம்.” என்று கூறிய அடுத்த நிமிடமே மாலதி சயனைட்டைக் கடித்துவிட்டாள். ஏனென்றால் இராணுவத்தினர் சுற்றி வளைத்துவிட்டனர். கோப்பாய் கிறேசரடியில் மாலதி தன்னை அர்ப்பணித்தாள். ஆமியின் சுற்றிவளைப்பால், மாலதியின் ஆயுதத்தைத்தான் முதலில் கொண்டு வந்தார்கள். மாலதி சொன்னதுபோல், அடுத்த நாள்தான் மாலதியின் புகழுடலை மீட்டெடுத்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளிகளும் எங்களின் சொந்த மண்ணின் விடிவுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றார்கள். எல்லாப் போராளிகளும் தங்கள் உயிருக்கும் மேலாகத் தங்களின் ஆயுதங்களைத் தான் நேசிக்கின்றார்கள். இந்த வரிசையில் மாலதியும்...... கோப்பாய்க் கிறேசரடியில் மாலதியின் பசுமையான நினைவுகளைத் தாங்கி நிற்கும் அவளது கல்லறைக்கு அடிக்கடி என் கால்கள் விரையும். அங்கிருந்து நான் திரும்புவது, உரமேறிய உறுதியான போராட்ட உணர்வோடு மட்டுமே......

நன்றி: ‘சுதந்திரப் பறவைகள்’

# நிகழ்வும் நினை...

ஆயுதப் படையினர் அழித்தொழிக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி சிறீலங்கா அரசுக்கு இல்லை. எனவே சிறீலங்கா ஆயுதப் படையினர், விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடாத்த வேண்டும். இவர்களை வெற்றிகொள்ள வேண்டும். பயங்கரவாதப் பிரச்சினையை ஒழிக்க வேண்டும். நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும். அவ்வளவுதான் சிறீலங்காவின் விருப்பம்.

இவ்விடத்தில் 1990 ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி, நோர்வே -ஒஸ்லோவில் இடம்பெற்ற ஒரு கருத்தரங்கில், சிறீலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்த கருத்து ஒன்றினை நினைவு கூருதல் பொருத்தமானதாகும். PRIO வினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கில், PRIO வின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ‘பல்லினச் சமுதாயத்தினை நோக்கி...’ (Towards a Multi Ethnic Society) என்ற ஆய்வின் கருத்துக் கூறலுக்காக பல்வேறு கருத்தாளர்கள் கூடியிருந்தார்கள். இவ்வாய்வில் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் கவனத்தில் கொள்ளப்படாமையினை கருத்ததாடலில் பங்குபற்றிய பலரும் சுட்டிக்காட்டி, சிறீலங்கா அரசுக்கெதிரான கண்டனத்தையும் எழுப்பினர். இக் கண்டனத்தில் ஜே. வி. பி. ஒழிப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட, மனிதப் படுகொலைகளும் முக்கிய இடத்தினை வகித்தன. இதற்கு பிரட்மன் வீரக்கோன், ”எது என்னவாக இருந்தாலும் இப்போது இலங்கையில் அமைதி நிலவுகின்றது” என்ற தோரணையில் பதிலளித்தார். (அன்றைய தினம் தான் சிறீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஆரம்பமாகியது. இந்தப் பதிலினை அளிக்கும்போது பிரட்மனுக்கு மோதல் ஆரம்பமாகியது தெரிந்திருக்கவில்லை. )

பிரட்மனின் இந்தக் கூற்றையும் கவனத்தில் எடுக்கும்போது, ‘நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பது, ‘பயங்கரவாதிகளை’ அழிப்பதன் மூலம்தான் சாத்தியம் என தற்போதைய அரசு கணித்திருக்கும் என்ற எண்ணத்தை வலுப்படுத்துகின்றது.

இந்த நோக்கில், ‘பயங்கரவாதத்தினை’ அழிக்கப் புறப்பட்ட ‘யாழ் தேவி’ தடம்புரண்டமை, சிறீலங்கா அரசுக்கு பெரிய நெருக்கடியினை ஏற்படுத்தியிருந்தது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முன்னர் இப்போது, ‘நாகதேவன் துறை -பூநகரி’ என்ற பெயரில் பேரிடி விழுந்திருக்கின்றது.

இப்பொழுது சிறீலங்கா அரசு ஒரு பொறிக்குள் மாட்டுப்பட்டிருக்கின்றது. அதன் பிரகடனத்தின்படி, ‘பயங்கரவாதிகளை’ அதாவது, விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டும். இனப்பிரச்சினை இல்லை என்று நிராகரித்துவிட்டமையால், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போவது என்பது தர்க்கரீதியாக முரண்பாடு உள்ளதாகவே இருக்கும்.

ஆனால் நடைமுறையில், ‘பயங்கரவாதிகளை’ அழிக்கும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொள்வதை விட, படையினரையே ‘பயங்கரவாதிகள்’ அழித்துவருகின்றனர். விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கவும் முடியவில்லை. அதே நேரம் அரசு விரும்பினால் கூட, விடுதலைப் புலிகளுடன் ஒரு பேச்சுவார்த்தையினை நடத்த முடியாத அளவுக்கு நிலமைகள் வளர்ந்து போயுள்ளன.

ஒரு அரசியல் தலைமை எவ்வளவு தூரம் தான் விரும்புகின்றபடி, எவ்வித சிக்கலும் இல்லாமல் முடிவுகளை எடுக்க முடிகின்றதோ அவ்வளவு தூரம் அது, ஒரு பலமான தலைமையாக இருக்கும். ஆனால் சிறீலங்கா அரசினைப் பொறுத்தவரை, விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் என்ற முடிவினை எதுவித சிக்கலும் இல்லாமல் எடுப்பதற்கு, நிறுவனமயப்பட்டுள்ள பௌத்த சிங்கள இனவாதம் துணையாக நின்று அனுமதிக்கின்றது. அதேவேளை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போவது என்ற முடிவினை, இலகுவாக எடுக்க முடியாத அளவுக்கு, சிறீலங்கா அரச தலைமை நிலைமைகளை வளர்த்து விட்டுள்ளது. இந்த வகையில் சூழ்நிலைக்கு ஏற்ற எந்த முடிவினையும், தனது நலனின் அடிப்படையில் கூட எடுக்க முடியாத ஒரு பலவீனமான நிலைமையிலேயே சிறீலங்கா அரசு உள்ளது. இன்னொரு வகையில் கூறுவதாயின், இராணுவ நடவடிக்கை தவிர, வேறு அரசியல் தீர்வு முயற்சியில் இறங்கமுடியாத ஒரு பொறிக்குள் சிறீலங்கா அரசு மாட்டுப்பட்டுள்ளது.

எனவே, சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகள் மீது தாக்குதலை மேற்கொண்டு வெற்றிகளைச் சம்பாதிக்க வேண்டும். அவ் வெற்றிகளிலேயே அரசின் எதிர்காலம் உள்ளது. ஆனால் புதிய ஜனாதிபதியின் ‘பயங்கரவாதப் பிரச்சினை’ என்ற பிரகடனத்தின் பின் மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு, கிளாலிக் கடலேரியில் கரும்புலித் தாக்குதல், பருத்தித்துறைக் கடலில் கரும்புலித் தாக்குதல், ‘யாழ்தேவி’,

தொடர்ச்சி 14ம் பக்கம் ...


இத்தாலியில்

மாவீரர் நாள்

முத்தமிழ் வீர வணக்க விழா

காலம் 27–11–1993 சனிக்கிழமை

நேரம் மாலை 6.30 மணி

இடம்
CINETEATRO RANCHIBILE
IDON BOSCOI
VIA LIBERTA 199

அந்நிய தேசத்தில் நாம் வாழ்ந்து வந்தாலும் எம்
இதயத்தில் சோகம் விக்கி நின்றாலும் முகத்தில் எம்
எதிர்கால சந்ததியின் விடிவுக்குவழி சமைத்திட்டு
இறந்தும் எம் நெஞ்சத்தில் உயிருடன் வாழுகின்ற
இம் மாவீரர்களை பூசிக்க இதயத்தில்
ஈரமுள்ளவர்களே வாருங்கள்

தமிழர் ஒருங்கிழணப்புக் குழு
கலை பண்பாட்டுக்குழு
பலெர்மோ